# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC.682/2019 <br> Sessions : <br> Deposition of Witness for : LW-11/PW- 7 <br> Name : மாரியப்பன் <br> Father's/Husband's Name : தட்சிணாமூர்த்தி <br><br> Nationality : Indian | Village: <br> Age :37 <br> Taluk : <br><br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 29.10.2025**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமை காவலர் திரு. வீரபாண்டியன் என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜர்.**

<u>**முதல் விசாரணை**</u>:

நான் தற்போது வண்ணக்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன், இவ்வழக்கில் இறந்துபோன செந்தில்குமார் என்பவதை எனக்கு தெரியும். கடந்த 6.05.2017 ம் தேதி மதியம் 3 மணியளவில் நான் எனது கிராமத்தில் இருந்தபோது எனது நண்பர் என்னிடம் வந்து ஆடுதுறை மெயின்ரோட்டில் செந்தில்குமார் சென்ற இருசக்கர வாகனத்தில் மீது வேன் மோதி விபத்து ஏற்பட்டதாக கூறினார். நான் சென்று பார்த்தபோது செந்தில்குமார் இறந்துவிட்டார். பின்னர் இரவு 10.30 மணியளவில்

நான் வீட்டிற்கு சென்றபோது சம்பவ இடத்தில் போலிசார் விசாரித்து சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து என்னிடமும் விக்னேஷ் என்பவரிடமும் கையொப்பம் வாங்கினார்கள். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். ( **மேற்படி முதலாவது கையொப்பம் மட்டும் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeshwari,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
திருவிடைமருதூர். (FAC)

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC.682/2019 <br> Sessions : <br> Deposition of Witness for : LW-6/PW- 6 <br> Name : பானுசுந்தரி <br> Father's/Husband's Name : செந்தில்குமார் <br><br> Nationality : Indian | Village: <br> Age :33 <br> Taluk : <br><br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 29.10.2025**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமை காவலர் திரு. வீரபாண்டியன் என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜர்.**

<u>**முதல் விசாரணை**</u>:

நான் தற்போது காரைக்காலில் வசித்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன், இவ்வழக்கில் இறந்துபோன செந்தில்குமார் எனது கணவர். அசா1 ஐ எனக்கு தெரியும். கடந்த 6.5.2017 ம் தேதி மதியம் சுமார் 4 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது எனது தெருக்காரர்கள் என்னிடம் வந்து எனது கணவர் செந்தில்குமார் ஆடுதுறை மெயின்ரோட்டில் விபத்து ஏற்பட்டு இறந்துவிட்டதாக கூறினார்கள். நான் ஆடுதுறை அருள் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அவர் இறந்துவிட்டார். பின்னர்

திருவிடைமருதூர் அரசு மருத்துவமனையில் எனது கணவர் பிரேதத்தின் மீது போலிசார் பிரேத விசாரணை செய்தார்கள். நானும் உடன் இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜரில் இருந்தார். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeshwari,
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர் (FAC).**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC.682/2019 | |
| Sessions : | |
| Deposition of Witness for : LW-5/PW- 5 | Village: |
| Name : ராஜேஷ் | Age :37 |
| Father's/Husband's Name : சண்முகம் | Taluk : |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 29.10.2025**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமை காவலர் திரு. வீரபாண்டியன் என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது ஆடுதுறையில் வசித்து வருகிறேன். நான் வெல்டராக வேலை செய்து வருகிறேன், இவ்வழக்கில் இறந்துபோன செந்தில்குமார் என்பவரை எனக்கு தெரியாது. அசா1 மற்றும் அசா4 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 6.5.2017 ம் தேதி மதியம் சுமார் 3 மணியளவில் நான் தரங்கம்பாடி மெயின்ரோட்டில் உள்ள எங்கள் பட்டறையில் நானும் அசா4 ம் வேலை செய்து கொண்டிருந்தபோது

ரோட்டில் சென்றவர்கள் எங்களிடம் வந்து சுமைதாங்கி படித்துறைக்கு அருகே விபத்து நடந்ததாகவும் அதில் 2 நபர்கள் அடிப்பட்டுவிட்டதாகவும் கூறினார்கள். நானும் அசா4 ம் விபத்து நடந்த இடத்திற்கு சென்று பார்த்தபோது அசா1 தலை மற்றும் கால் கைகளில் காயம்பட்டு கிடந்தார். அவரை நாங்கள் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். விபத்தில் காயமுற்ற மற்றொரு நபரை ஆடுதுறை அருள் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அவர் இறந்துவிட்டதாக கேள்வி பட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

## அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 06.05.2017 ம் தேதி மதியம் சண்முகம், சித்தார்த்தன், மாரியப்பன், விக்னேஷ் ஆகிய 4 பேரும் ஒரு வேலையாக ஆவணியாபுரம் சென்றுவிட்டு தரங்கம்பாடி ரோடு வழியாக வரும்போது அங்கு என்னுடன் வெல்டிங் வேலை செய்து கொண்டிருந்த இளையராஜவிடம் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும் அப்போது செந்தில்குமார் டிவிஎஸ் ஸ்டார்சிட்டி PY02P3775 என்ற இருசக்கர வாகனத்தை அவர் ஓட்ட குமரவேல் பின்னால் அமர்ந்து தரங்கம்பாடி ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்து கொண்டிருந்தார்கள் என்றும் அப்போது மதியம் சுமார் 3.30 மணியிருக்கும் என்றும் அப்போது அதே ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்து கொண்டிருந்த TN31P1909 என்ற பதிவெண் கொண்ட மகேந்திர வேனை ஆஜர் எதிரி அதி வேகமாகவும் கவனக் குறைவாகவும் ஓட்டி வந்து மேற்படி இருசக்கர வாகனத்தின் மீது நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்படுத்தினார்

என்றும் சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் ஆஜரில் இருந்தனர். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeshwari,
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர் (FAC).**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC.682/2019 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-4/PW- 4 | Village: | |
| Name | : இளையராஜா | Age | :35 |
| Father's/Husband's Name | : மோகன் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 29.10.2025**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமை காவலர் திரு. வீரபாண்டியன் என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது ஆடுதுறையில் வசித்து வருகிறேன். நான் வெல்டராக வேலை செய்து வருகிறேன், இவ்வழக்கில் இறந்துபோன செந்தில்குமார் என்பவரை எனக்கு தெரியாது. அசா1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 6.5.2017 ம் தேதி மதியம் சுமார் 3 மணியளவில் நான் தரங்கம்பாடி மெயின்ரோட்டில் உள்ள எங்கள் பட்டறையில் வேலை செய்து கொண்டிருந்தபோது ரோட்டில் சென்றவர்கள் என்னிடம் சுமைதாங்கி படித்துறைக்கு அருகே விபத்து நடந்ததாகவும் அதில் 2 நபர்கள்

அடிப்பட்டுவிட்டதாகவும் கூறினார்கள். நானும் ராஜேசும் விபத்து நடந்த இடத்திற்கு சென்று பார்த்தபோது அசா1 தலை மற்றும் கால் கைகளில் காயம்பட்டு கிடந்தார். அவரை நாங்கள் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். விபத்தில் காயமுற்ற மற்றொரு நபரை ஆடுதுறை அருள் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அவர் இறந்துவிட்டதாக கேள்வி பட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 06.05.2017 ம் தேதி மதியம் சண்முகம், சித்தார்த்தன், மாரியப்பன், விக்னேஷ் ஆகிய 4 பேரும் ஒரு வேலையாக ஆவணியாபுரம் சென்றுவிட்டு தரங்கம்பாடி ரோடு வழியாக வரும்போது அங்கு வெல்டிங் வேலை செய்து கொண்டிருந்த என்னிடம் பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும் அப்போது செந்தில்குமார் டிவிஎஸ் ஸ்டார்சிட்டி PY02P3775 என்ற இருசக்கர வாகனத்தை அவர் ஓட்ட குமரவேல் பின்னால் அமர்ந்து தரங்கம்பாடி ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்து கொண்டிருந்தார்கள் என்றும் அப்போது மதியம் சுமார் 3.30 மணியிருக்கும் என்றும் அப்போது அதே ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்து கொண்டிருந்த TN31P1909 என்ற பதிவெண் கொண்ட மகேந்திர வேனை ஆஜர் எதிரி அதி வேகமாகவும் கவனக் குறைவாகவும் ஓட்டி வந்து மேற்படி இருசக்கர வாகனத்தின் மீது நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றும் சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் ஆஜரில் இருந்தனர். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeshwari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர் (FAC).**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC.682/2019 <br> Sessions : <br> Deposition of Witness for : LW-3/PW- 3 <br> Name : சித்தார்த்தன் <br> Father's/Husband's Name : கோவிந்தராஜ் <br> Nationality : Indian | Village: <br> Age :47 <br> Taluk : <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 29.10.2025**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமை காவலர் திரு. வீரபாண்டியன் என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>:**

நான் தற்போது வண்ணக்குடி கிராமத்தில் தெற்கு தெருவில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன், இவ்வழக்கில் இறந்துபோன செந்தில்குமார் என்பவரை எனக்கு தெரியும். அசா1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு மாலை சுமார் 5 மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது எனக்கு போன் மூலமாக ஆடுதுறை ரோட்டில் எனது ஊர்க்காரர் செந்தில்குமார் அடிப்பட்டு விட்டதாக கூறினார்கள். நான் உடனே விபத்து நடந்த இடத்திற்கு சென்று பார்த்தபோது

செந்தில்குமாரை ஆட்டோவில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். அவரை ஆடுதுறை அருள் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். காயம்பட்ட அசா1ஐ ஆட்டோவில் ஏற்றி கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். செந்தில்குமார் இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 06.05.2017 ம் தேதி மதியம் நான், சண்முகம், மாரியப்பன், விக்னேஷ் ஆகிய 4 பேரும் ஒரு வேலையாக ஆவணியாபுரம் சென்றுவிட்டு தரங்கம்பாடி ரோடு வழியாக வரும்போது அங்கு வெல்டிங் வேலை பார்க்கும் இளையராஜா என்பவரிடம் பேசிக்கொண்டிருந்தோம் என்றும் அப்போது செந்தில்குமார் டிவிஎஸ் ஸ்டார்சிட்டி PY02P3775 என்ற இருசக்கர வாகனத்தை அவர் ஓட்ட குமரவேல் பின்னால் அமர்ந்து தரங்கம்பாடி ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்து கொண்டிருந்தார்கள் என்றும் அப்போது மதியம் சுமார் 3.30 மணியிருக்கும் என்றும் அப்போது அதே ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்து கொண்டிருந்த TN31P1909 என்ற பதிவெண் கொண்ட மகேந்திர வேனை ஆஜர் எதிரி அதி வேகமாகவும் கவனக் குறைவாகவும் ஓட்டி வந்து மேற்படி இருசக்கர வாகனத்தின் மீது நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றும் சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் ஆஜரில் இருந்தனர். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeshwari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர். (FAC)**

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC.682/2019 <br> Sessions : <br> Deposition of Witness for : LW-2/PW- 2 <br> Name : சண்முகம் <br> Father's/Husband's Name : மாரிமுத்து <br> Nationality : Indian | Village: <br> Age :55 <br> Taluk : <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 29.10.2025**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமை காவலர் திரு. வீரபாண்டியன் என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜர்.**

<u>**முதல் விசாரணை**</u>:

நான் தற்போது வண்ணக்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் டீ மாஸ்ட்டராக வேலை செய்து வருகிறேன், இவ்வழக்கில் இறந்துபோன செந்தில்குமார் என்பவரை எனக்கு தெரியும். அசா1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு மாலை சுமார் 5 மணியளவில் நான் ஆடுதுறையில் உள்ள டீக்கடையில் வேலை செய்து கொண்டிருந்தபோது கடையில் வேலை செய்த நபர்கள் என்னிடம் வந்து எனது ஊர்க்காரர் செந்தில்குமார் ஆடுதுறை ரோட்டில் அடிப்பட்டதாக

கூறினார்கள். நான் உடனே ஆடுதுறையில் உள்ள அருள் மருத்துவமனைக்கு சென்று செந்தில்குமாரை பார்த்தபோது செந்தில்குமார் இறந்துவிட்டார். . போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 06.05.2017 ம் தேதி மதியம் நான், சித்தார்த்தன், மாரியப்பன், விக்னேஷ் ஆகிய 4 பேரும் ஒரு வேலையாக ஆவணியாபுரம் சென்றுவிட்டு தரங்கம்பாடி ரோடு வழியாக வரும்போது அங்கு வெல்டிங் வேலை பார்க்கும் ராஜேஷ் என்பவரிடம் பேசிக்கொண்டிருந்தோம் என்றும் அப்போது செந்தில்குமார் டிவிஎஸ் ஸ்டார்சிட்டி PY02P3775 என்ற இருசக்கர வாகனத்தை அவர் ஓட்ட குமரவேல் பின்னால் அமர்ந்து தரங்கம்பாடி ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்து கொண்டிருந்தார்கள் என்றும் அப்போது மதியம் சுமார் 3.30 மணியிருக்கும் என்றும் அப்போ அதே ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்து கொண்டிருந்த TN31P1909 என்ற பதிவெண் கொண்ட மகேந்திர வேனை ஆஜர் எதிரி அதி வேகமாகவும் கவனக் குறைவாகவும் ஓட்டி வந்து மேற்படி இருசக்கர வாகனத்தின் மீது நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றும் சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் ஆஜரில் இருந்தனர். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeshwari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர். (FAC)**

## (FAC)DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC.682/2019 | |
| Sessions : | |
| Deposition of Witness for : LW-1/PW-1 | Village: |
| Name : வேல்@குமரவேல் | Age :47 |
| Father's/Husband's Name : நாராயணசாமி | Taluk : |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 29.10.2025**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமை காவலர் திரு. வீரபாண்டியன் என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது ஆடுதுறையில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன், இவ்வழக்கில் இறந்துபோன செந்தில்குமார் என்பவரை எனக்கு தெரியும். சாட்சிகள் சண்முகம், இளையராஜா. சித்தார்த்தன், ராஜேஷ் ஆகியோர்களை எனக்கு தெரியும். இளையராஜா மற்றும் ராஜேஷ் எனது ஊர்க்காரர்கள். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 06.05.2017 ம் தேதி நானும் செந்திகுமாரும் ஆவணியாபுரத்திற்கு சென்றுவிட்டு திரும்பி வீட்டிற்கு வருவதற்காக செந்தில்குமாரின் டிவிஎஸ் இருசக்கர

வாகனத்தில் அவர் ஓட்ட நான் பின்னால் அமர்ந்து கொண்டு தரங்கம்பாடி டு ஆடுதுறை ரோட்டில் சுமைதாங்கி படித்துறை அருகே வந்தபோது எங்களுக்கு எதிரே வந்த வேனை ஓட்டி வந்த ஓட்டுநர் எங்கள் வண்டியின் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார். அதில் எனக்கு தலை, கால் மற்றும் கைகளில் காயம் ஏற்பட்டது. காயம்பட்ட என்னை இளையராஜா மற்றும் ராஜேஷ் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தார்கள். சிகிச்சையில் இருந்தபோது விபத்தில் செந்தில்குமார் இறந்துவிட்டதாக கேள்வி பட்டேன். சிகிச்சையில் இருந்தபோது திருவிடைமருதூர் போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். விபத்து நடந்தபோது விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநரை நான் பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். அசா1 புகார் வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இறந்த செந்தில்குமாருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். எதிரி வானத்தை சரியாக ஓட்டி வந்தார் என்றாலும் இறந்த செந்தில்குமார்தான் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் அஜாக்கிரதையாக வாகனத்தை ஓட்டு வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்றாலும் சரியல்ல.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeshwari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர். (FAC)**